TIPS FOR PARENTS

# High School Courses and Choices



## உயர்தர பாடசாலைப் பாடநெறிகளும் தெரிவுகளும்

உங்கள் பிள்ளையினுடைய கல்வியில் உயர்தர பாடசாலை புகுவது என்பது மிக முக்கியமான கால கட்டம். 9ந் தரத்திலே மாணவர்கள் செய்கின்ற பாடத்தெரிவுகள் அவர்கள் பின்னர் கற்கப் போகும் தரங்களிலேயும் மற்றும் உயர்தர பாடசாலையை விட்டு நீங்கிய பின்னர் கற்கவுள்ளவுள்ளவற்றிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. அத்தெரிவுகள் பற்றி விளங்கிக் கொள்வதற்கான முதற் படியாக மாத்திரமே இந்த உதவும் குறிப்புத் தாள் உள்ளது.

### *பெற்றோர்கள் எவ்விதமாக உதவலாம்?*

உயர்தர பாடசாலைப் பாடறெிகள் மற்றும் செயல் நிகழ்வுத்திட்டங்கள் பற்றிய தகவலை ஒக்ரோபர் மற்றும் ஜனவரி மாதங்களுகிடையிலே 8ந் தரத்தில் கற்கும் உங்கள் மாணவர் பெறுவார். உயர்தரப் பாடசாலை தகவல் இரவுகள் அல்லது திறந்த இல்ல நிகழ்வுகள் சில பாடசாலைகளில் நடைபெறுவதுண்டு. தகவலை வாசித்தறிவதுடன் தகவல் இரவுகளுக்கு நீங்கள் செல்வதும் மிகவும் அவசியமானது. இதன் மூலம் உங்கள் பிள்ளையினுடைய அக்கறைகள், திறன்கள் மற்றும் வருங்காலக்க் குறிக்கோள்களுக்கு ஏற்ற தெரிவுகளை நடத்த நீங்கள் உதவமுடியும். சில சமூகங்களிலே உள்ள 8ந் தர மாணவர்கள் தம் தெரிவுகளை வெவ்வேறு வகையான பாடநெறிகளும் செயல் நிகழ்வுத் திட்டங்களும் உள்ள இரண்டாம் நிலைப் பாடசாலைகளுக்கிடையே செய்வதும் உண்டு.

நீங்கள் ஒப்பமிடுவதற்கான படிவம் ஒன்றினை உங்கள் பிள்ளை வீட்டினுக்குக் கொண்டு வருவார்கள். இத் படிவத்தில் தெரிவுக்கான பாடநெறிகள் பட்டியலிடப் பட்டிருக்கும். இப்பட்டியலில் உள்ள பாட நெறிகளை உங்கள் பிள்ளையுடன் சேர்ந்து பார்வையிட்டு அவரின் தெரிவுகள் அவரது அக்கறைகளுக்கும் திறன்களுக்கும் வெகுபொருத்தமானவையா என்பதை உறுதி செய்வது மிகமுக்கியமானது. உங்கள் பிள்ளை செய்த தெரிவுகளை அங்கீகரிப்பது உங்கள் பொறுப்பு.

உங்களுக்கு உதவி தேவையாயின் உங்கள் பாடசாலை வழிகாட்டி ஆலோசகருடன் பேசுங்கள். பாடசாலைத் தெரிவுகள் பற்றிய தேவையான தகவலையும் பாடநெறிகளின் பட்டியலையும் பாடசாலைகளும், பாடசாலைச்சபைகளும் பிரசுரித்துள்ளன. கனடாவிற்குப் புதிதாக வந்தோருக்கு வேண்டிய உதவிகளைப் பாடசாலைக் குடி அமர்வு ஊழியர்கள் செய்வார்கள்.

9ந் தர மாணவர்களின் பாட நெறித் தெரிவுகள் அவர்களுடைய வருங்காலத்துக்கான தேர்வுகளைப் பெரிதளவில் பாதிக்கும் என்பதை நினைவு கூரல் மிக முக்கியமாகும். பல்வேறு வகையான பாட நெறிகள் உள்ளன. சமூகக் கல்லூரிகளுக்குச் சிலவும் , வேறுசில பல்கலைக் கழகங்களுக்கும் .இன்னும் சில தொழிற் பயிற்சிக்கோ அல்லது நேரடியாக தொழிலிற்கோ இட்டுச் செல்கின்றன. உயர்தரப் பாடசாலைகள் யாவுமே இத்தகைய வேறுபட்ட பாடநெறிகளைக் கற்பிப்பதில்லை.

9ந் தர பாடநெறிகளில் சித்தி பெறும் மாணவர்கள் உயர்தரப் பாடசாலைப் பட்டதாரி களாகின்றனர். தமது பிள்ளைகள் அவர்களுக்கு ஏற்ற பாட நெறிகளை **ஆண்டு தோறும்** தெரிவு செய்யப் பெற்றோர்கள் உதவ வேண்டும்.

### நல்ல தெரிவுகளைப் பிள்ளைகள் செய்வதற்குப் பெற்றோர் எவ்வகையில் உதவலாம்?

உயர்தரப் பாடசாலைக் கல்வியை முடித்ததும் உங்கள் பிள்ளை என்ன செய்ய விரும்புகிறார் என்பது பற்றி அவரோடு கதையுங்கள்.

உங்கள் பகுதியிலே உள்ள பாடசாலையிலிருந்து பாடநெறிப் பட்டியலை பெற்றுக்கொள்ளுங்கள் அல்லது பாடசாலை இணையதளத்தில் பாடசாலை விபரத்தைப் பாருங்கள் அல்லது பாடசாலை பற்றிய குறிப்பினைப் பார்வையிடுங்கள். எல்லாப் பாடசாலைகளிலும் ஒரே மாதிரியான பாடநெறிகளோ பாட வகைகளோ இருப்பதில்லை.

உயர்தர பாடசாலையின் தகவல் இரவகளுக்கும் திறந்த இல்ல நிகழ்வுகளுக்கும் செல்லுங்கள். சில பாடசாலைகள் மொழி பெயர்ப்பாளரகளையும் வழுங்குவார்கள்.

உங்கள் பிள்ளையினுடைய அக்கறைகளுக்கும் ஆற்றல்களுக்கும் ஏற்றவாறு மிகச் சிறந்த தெரிவுகளைச் செய்வதற்கு உதவுதற்காகப் பாடசாலை வழிகாட்டி ஆலோசகருடன், உப - அதிபருடன் அல்லது அதிபருடன் ஒரு நேரத்தை ஒதுக்கித் தருமாறு கேளுங்கள்.

### ஓன்றாறியோ உயர்தரப் பாடசாலைப் பட்டதாரியாவதற்குத் தேவையானவை எவை?

- 9 முதல் 12ந் தரங்களுக்கிடைப் பட்ட காலத்தில் மாணவர்கள் 30 விசேட சித்தி பாடநெறிகளில் சித்தியுற வேண்டும். இந்த 30 விசேட சித்தி பாடநெறிகளில்,18 கட்டாய விசேடசித்திகளாக இருக்க வேண்டும் ஏனைய 12 னையும் விருப்பத்துக்குரிய விசேடசித்திப் பாடநெறிகளில் இருந்து தெரிவு செய்யலாம்.
- கட்டாயமாக மாணவர்கள் 40 மணித்தியாலம் சமூக சேவையாற்றியிருக்க வேண்டும்.
- ஒன்ராறியோ இரண்டாம் நிலைப்பாடசாலை எழுத்தறிவுச் சோதனை அல்லது எழுத்தறிவுப் பாடநெறியில் மாணவர்கள் சித்தியடைய வேண்டும்.
- அதிகமான மாணவர்கள் தமது உயர்தரப் பாடசாலைக் கல்வியை நான்கு அல்லது ஐந்து வருடங்களில் முடித்து விடுகிறார்கள் எனினும் அவர்கள் 21 வயதினை நிறைவு செய்யும் வரை அங்கே தங்கிக் கொள்ளலாம்.

### மாணவர்களுக்கு 9ம்,10 ந் தரங்களில் எத்தகைய தெரிவுகள் உள்ளன?

9ம், 10ந் தரங்களிலே நான்கு வகையான பாடநெறிகள் உள்ளன:

- **பிரயோக** - செய்முறை பிரயோகங்களையும் மெய்யான உதாரணங்களையும் முனைப்பாகக் கொண்டிருக்கும்;
- **அறிவுசால்**- கொள்கை மற்றும் கருத்தியல் பிரச்சனைகளை முனைப்பாகக் கொண்டிருக்கும்;
- **இடத்துக்கேற்ப விரிவாக்கம் செய்யப்பட்ட** - கட்டாய விசேடசித்திப் பாடநெறிகள்( பிரதானமானவை எனவும் அழைக்கப் படுகின்றன) கூடிய நெகிழ்ச்சி மற்றும் உதவி தேவையான மாணவர்களுக்கானது; மற்றும்
- **திறந்த** - மாணவர்கள் மேற் கல்வி கற்று தமது கல்வி அறிவை மேம்படுத்துதற்காக ஆயத்தப்படுத்துதல்.

மாணவர்கள் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், புவியியல்,சரித்திரம்,உடற்கல்வி,மற்றும் பிரெஞ்சு மொழி கற்க வேண்டும். வெவ்வேறு வகைப் பாடநெறிகளைக் கலந்து கற்கவும் மாணவர்கள் தெரிவு செய்யலாம். உதாரணமாக, மாணவர் ஒருவர் பிரயோக ஆங்கிலத்துடன் அறிவுசால் கணிதத்தையும் கற்கமுடியும். தங்களுக்கு அக்கறை உள்ள பாடங்களில் உள்ள தேர்வுக்குரிய அல்லது திறந்த பாட நெறிகளிலும் தெரிவுகளைச் செய்ய முடியும்.

### 9ம், 10ம் தரங்களிலே செய்யும் பாடநெறித் தெரிவுகள் மாணவர்களை எங்ஙனம் பாதிக்கின்றன?

9 மற்றும் 10ந் தரங்களிலே மாணவர்கள் தெரிவு செய்யும் பாடநெறிகள் அவர்கள் 11 மற்றும் 12ந் தரங்களிலே கற்கவுள்ள குறிப்பிட்ட பாடநெறிகளுக்கு அவர்களைத் தயார் செய்கின்றன.

people for Education
BECAUSE EDUCATION MATTERS MOST

Copies are available in several languages at *www.peopleforeducation.com.*

For more information, call 416-534-0100 or email: *info@peopleforeducation.com*
© People for Education 2009
THE ONTARIO TRILLIUM FOUNDATION
LA FONDATION TRILLIUM DE L'ONTARIO

toronto community foundation

# High School Courses and Choices

எனவே அத் தெரிவுகள் அவர்கள் பாடசாலைப் பட்டதாரியான பின்னர் அவர்களில் பாதிப்பினை ஏற்படுத்தவே செய்யும்.

**மாணவர்களுக்கு 11ம், 12ந் தரங்களில் எத்தகைய தெரிவுகள் உள்ளன?** உயர்தர பாடசாலைக் கல்வி முடித்த **பாடநெறிகள் எந்கே கொண்டு செல்கின்றன?**

பின்னர் தமது இலக்குகட்கு ஆயத்தப் படுத்தக் கூடிய நான்கு துறைகளில்உள்ள பாட நெறிகளில் ஏதாவது ஒன்றினை மாணவர்கள் தெரிவு செய்வார்கள். அவர்ககளின் இலக்குகளாவன: வேலைத் தலம், கல்லூரி, பல்கலைக்கழகம் /கல்லூரி மற்றும் பல்கலைக்கழகம் ஆகும்.

தரங்கள் 9ம் 10ம்

தரங்கள் 11ம் 12ம்




**ஒரு வகைப் பாடநெறியிலிருந்து இன்னொரு வகையினுக்கு மாணவர் மாறமுடியுமா?**
சில சமயங்களில் மாணவர்கள் ஒரு வகைப் பாட நெறியிலிருந்து இன்னோர் வகையினுக்கு மாறமுடியும். அப்பொழுது அவர் ஒரு பாடத்தினைத் திரும்பவும் கற்க வேண்டி வரும் ( உ.ம் 9ம் தரத்தில் பிரயோக கணிதத்தில் சித்தி பெற்ற மாணவர் 9ந் தர அறிவு சால் கணிதத்தைக் கற்றக வேண்டி வரும்) அல்லது ஒன்றில் கோடை கால பாடசாலையில் அல்லது வலை மனை மூலம் துறைமாற்றும் பாடநெறியினைக் கற்பதால் இது சாத்தியமாகலாம். வழிகாட்டி ஆலோசகர் இதற்கு உதவி செய்வார்.

**உயர்தரப் பாடசாலை ஒன்றினைத் தெரிவு செய்கையில் பெற்றோர்கள் கேட்க வேண்டிய வினாக்கள் எவை?**

- 9ம் மற்றும் 10ந் தர அறிவுசால், பிரயோக மற்றும் இடத்துக்கேற்ப விரிவாக்கம் செய்யப்பட்ட பாட நெறிகளிலே் எப்பாடங்களை நீங்கள பயிற்றுகிறீர்கள்?
- 11ம் மற்றும் 12ந் தரங்களிலே, வேலைத்தலம், கல்லூரி, கல்லூரி /பல்கலைக் கழகம், பல்கலைக்கழகம் ஆகியவற்றிற்காக நீங்கள் பயிற்றும் பாடங்கள் யாவை?
- விருப்பத்துக்குரிய தேர்வுப் பாட நெறிகள் அல்லது செயல் நிகழ்வுத் திட்டங்களில் எவற்றினை நீங்கள் கற்பிக்கிறீர்கள் (உ.ம். கணினி வலைமனையாக்கல், மொழிகள்).
- போதிய எண்ணிக்கை மாணவர்கள் தெரிவு செய்யாமையால் ஏதாயினும் பாடநெறிகள் கற்பிக்காது நிறுத்தப் படக் கூடிய சாத்தியம் உள்ளதா? அவை எவை?

**விசேட கல்வி உதவி பற்றி பெற்றோர்கள் கேட்கக் கூடிய கேள்விகள் யாவை?**

எவ்வகையான விசேட தேவைகளுக்கு உங்கள் பாடசாலையால் உதவி தர முடியும்?
உங்கள் பாடசாலையில் உள்ள மூலவளங்கள் எவை? (உ.ம். ஊழியர், செயல் நிகழ்வுத் திட்டங்கள், கணினி ஆய்கூடம், விசேட பாடநெறிகள்)
விசேட தேவை மாணவர்களுக்கு எத்தகைய பாடநெறிகள் உள்ளன? அவை தனிப் பட்ட பாடநெறிகளா அல்லது ஏற்கனவே உள்ள பாடநெறி ஒன்றுடன் ஒருங்கிணைக்கப் பட்டவையா?

**ஆங்கிலம் இரண்டாம் மொழியாகக் ( ESL) கற்பித்தல் சம்பந்தமாகப் பெற்றோர்கள் கேட்கக்கூடிய கேள்விகள் யாவை?**

உங்களிடம் ESL விசேடசித்தி பாடநெறிகள் உள்ளனவா? எப் பாடங்களில் உள்ளன?

**மேலும் தகவல்கள் பெறுவதற்கு:**

- உங்கள் கல்விச் சபையின் இணைய தளத்தினைப் பாருங்கள். அல்லது உங்கள் பிள்ளையின் பாடசாலையைத் தெலைபேசியில் அழையுங்கள்
- ஒன்ராறியோ கல்வி அமைச்சு
  http://www.edu.gov.on.ca/eng/document/curricul/secondary/oss/oss.html
- புதிதாக வந்தோருக்கான இரண்டாம் நிலைப் பாடசாலை வழிகாட்டி
  http://www.settlement.org/site/edguide Newcomers' Guide to Secondary School.


people for Education
BECAUSE EDUCATION MATTERS MOST

People for Education is an independent parents' group working to support public education in Ontario's English, French and Catholic schools.

You can reach us at: P.O. Box 64, Station P, Toronto, Ontario, M5S 2S6
Phone: 416-534-0100 • fax: 416-536-0100 • email: info@peopleforeducation.com or visit: www.peopleforeducation.com